**O.S.No.98/2012**

பி.வா.சா.1, திரு. ராமமூர்த்தி
நாள் : 16.07.2025 நேரம் : 12.22 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது பதில் அறிவிப்பிலும், எதிர் வழக்குரையிலும் மாறுபட்ட சங்கதிகளை குறிப்பிட்டுள்ளதால் எனது எதிர்வாதம் முரண்தடை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் வீண் கட்சி செய்வதால் தான் மற்ற பிரதிவாதிகள் என்னுடன் சேர்ந்து வழக்கு நடத்தவில்லை என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்த சகோதர, சகோதரிகளான வாதிகள் மற்றும் 10,11 பிரதிவாதிகளுக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் 5ம் வகுப்பு வரை இளஞ்செம்பூரிலும், 10ம் வகுப்பு வரை முதுகுளத்தூரிலும் பயின்றேன் என்றால் சரியல்ல. நான் எனது பள்ளிச் சான்றிதழை தாக்கல் செய்தால் எனது உண்மையான வயது தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 17 மற்றும் 40 லக்க சொத்துகள் எனது பெற்றோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களுக்கு 10,11 பிரதிவாதிகளின் கணவர்களின் பெயரில் வீட்டு வரி ரசீது மற்றும் மின்கட்டண ரசீது தவறாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பேச்சிமுத்து மற்றும் அவரது மாமியாரான 11ம் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்பட்ட விவரம் 11ம் பிரதிவாதி கருப்பாயிக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரம் மோசடி ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் எழுதி கொடுத்தவரின் புகைப்படமோ, அடையாள சான்றிதலோ இல்லை என்றால் சரிதான், அந்த சமயத்தில் அந்த வழக்கம் கிடையாது. பி.வா.சா.ஆ.5 ஆவணம் நான் அரசுக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது ஊரணி பயன்பாட்டிற்காக அரசுக்கு எழுதி கொடுத்துள்ளேன் என்றால்

கால்வாய்க்காக எழுதி கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் நான் எனக்கு பூர்வீக பாத்தியமான சொத்தை எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அது எனக்கு பாகப்பிரிவினையில் கிடைக்க பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் நான் இரு பத்திரங்கள் ஏற்படுத்தியுள்ளேன். எந்த பத்திரத்தில் எவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்று எனக்கு நினைவில் இல்லை. எனது தகப்பனார் காலத்திலிருந்தே ஊரணி உள்ளது என்றாலும், நான் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஊரணி தற்போது சர்வே எண். 109/5ஏ என வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்து தற்போது ஊரணியாக உள்ளது என்றால் சரியல்ல, நான் அதில் கால்வாய் உள்ளது. ஊரணிக்கும், தெற்கே உள்ள சொத்து சர்வே எண். 109/5பி உட்பிரிவு செய்யப்பட்டு இந்த வழக்கில் 14வது லக்க சொத்தாக வாதிகள் குறிப்பிட்டுள்ளனரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சங்கதியை நான் மறுக்கவில்லை என்றால் எனக்கு அந்த சர்வே எண் நினைவில் இல்லை. மேற்படி நான் குறிப்பிட்டுள்ள கால்வாயை பாகம் பிரிக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, அது எனக்கு ஏற்கனவே பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்து. மேற்படி பாகப்பிரிவினை எந்த தேதியில் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் பாகப்பிரிவினை நடந்து சுமார் 30, 35 வருடங்கள் இருக்கும், எனக்கு தற்போது தேதி நினைவில் இல்லை. நான் பாகம் பிரித்துவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சொத்தை ஏற்கனவே எனது தகப்பனார் அரசுக்கு கொடுத்து ஊரணி ஏற்பட்ட பின்பு நான் மோசடியாக வேறு ஊரைச் சேர்ந்த இரு நபர்களை சாட்சி கையொப்பம் இட வைத்து தற்போது இந்த பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய எதிர்வழக்குரையில் வாதி தாக்கல் செய்த வழக்கில் Partial Partition தோஷத்துக்கு உட்பட்டது என கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. கண்டிலான் குரூப் சர்வே எண்கள்.

115/6 ஏ, 115/6 பி, 115/5 பி, 107/4 ஏ சொத்துக்களை நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு அதை வாதிகள் தற்போது பிராதை திருத்தம் செய்து வழக்கில் சேர்த்துவிட்டனர் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.109/2 சந்திரனுக்கு பாத்தியம் என்பதாலும், சர்வே எண். 189/31 முத்துதேவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், சர்வே எண். 140/3 சி1 வேலுத்தேவருக்கு பாத்தியம் என்பதாலும், சர்வே எண். 167/7 பழனிவடிவு நாச்சியாருக்கு பாத்தியம் என்பதாலும், சர்வே எண். 109/5 ஏ ஊரணியாக உள்ளதாலும் இந்த வழக்கில் மேற்படி சொத்துக்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகள் எல்லாம் எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் மேற்படி நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நத்தம் சர்வே எண்கள். 456/12, 456/13, 456/17, 456/18 சொத்துகள் எல்லாம் அரசு புறம்போக்கு சொத்துகள் என்பதால் இந்த வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகள் எனது பெற்றோருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் இல்லை என்றும், ஆவணங்கள் நான் தாக்கல் செய்தால் வாதிகள் மேற்படி சொத்துக்களை வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களை நான் எனது தாயாரின் பெயரில் சர்வே எண். 189/31 அசைமென் பட்டா ஏற்பட்டுள்ளதை நிரூபணம் செய்ய தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் அடங்கியுள்ள சொத்து பெரியவில்லி தேவர் மகன் முத்துதேவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அது தவறாக எனது தாயாரின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் தவறாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் அதனடிப்படையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக எடுத்துகொள்ள முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 ஆவணம் வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட ஆவணம் என்பதால் அதற்கு சாட்சிய மதிப்பு இல்லை

என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எழுத்து மூலமாக பாகப்பிரிவினை பிரித்ததற்கு ஆவணங்கள் இல்லை என்றால் நாங்கள் தாவா சொத்தை வாய்மொழியாகத்தான் பாகப்பிரிவினை செய்தோம். நான் கூறும் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும், அது பதிவு சட்டத்தின் படி ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துகளை பாகம் பிரிக்காமல் பொதுவாக வைத்து தான் இன்று வரையில் வாதிகள் மற்றும் 1 முதல் 11, 16 முதல் 22 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகின்றோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கு சொத்துகள் சரியாகத்தான் மதிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் நான் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. நான் ஒரே ஆண் வாரிசு என்பதால் பெண்களுக்கு பாகம் கொடுக்க கூடாது என்பதற்காக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. 10 மற்றும் 11 பிரதிவாதிகள் எனது மிரட்டலுக்கு பயந்துதான் வாதிகளுடன் சேர்ந்து வழக்கு நடத்த முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.1 குறுக்குவிசாரணையின் போது குறியீடு செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. பி.வாசா.ஆ.1 ஆவணத்தில் உள்ள தரப்பினர்கள் அந்த ஆவணத்தில் கையொப்பம் இட்டது போல நான் போலியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் எனது கட்சியை நிரூபிக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.15 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.16 14:01:36 +0530